[1967 நவம்பர் 25

மாநிலத்திலுள்ள சிறைச்சாலைகள்

***443 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1952-க்கு பிறகு நமது ராஜ்யத்தில் எத்தனை சப்-ஜெயில்கள், மத்திய சிறைகள் புதிதாக கட்டப்பட்டன, ஜில்லாவாரியாக ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1952-ம் ஆண்டிற்கு பிறகு இம் மாநிலத்தில் மத்திய சிறைச்சாலையோ அல்லது மாவட்ட சிறைச் சாலையோ, எதுவும் புதிதாகக் கட்டப்படவில்லை. ஆனால் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் 1956-ஆம் ஆண்டில் ஒரு சிறிய சிறைச்சாலையும் தக்கலையில் 1962-ம் ஆண்டில் ஒரு சிறிய சிறைச் சாலையும் மட்டுமே கட்டப்பட்டன.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த சிறைச்சாலைகளை, ஏற்கனவே இருந்த சர்க்கார் எந்தெந்த விதத்தில் எல்லாம் சீர்திருத்தி அமைக்கவேண்டுமோ, அதைச் செய்யவில்லையென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்றையதினம் வந்திருக்கக்கூடிய இந்த சர்க்காராவது எந்தெந்த விதத்தில் அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது? அல்லது இனிமேல் செய்ய உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சிறைச்சாலையில் இட நெருக்கடி இருப்பதாக முடிவு செய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையை மத்திய சிறைச்சாலையாக மாற்றும்படி ஒரு ஏற்பாடு செய்திருக்கிறது. அதை விரிவாக்கினால் சிறைச்சாலையில் இருக்கும் இடநெருக்கடி குறையும்; வசதி பெருகும்.

***444 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்ட மார்க்கெட் கமிட்டியார் 1959 முதல் திருச்சி சப்-ஜெயில் கட்டடத்தை காலி செய்து தங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டு வருவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளியில் உள்ள சிறப்புத் துணைச் சிறைச் சாலையை அதன் தற்போதைய இடத்திலிருந்து திருச்சி மத்திய சிறையை அடுத்துள்ள ஓர் இடத்தில் கட்டப்படவிருக்கிற புதிய கட்டிடத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. அக் கட்டிடம் கட்டுவதற்கான நிதி ஒப்பளிப்பு இன்னும் வழங்கப்படவில்லை.

1967 நவம்பர் 25]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் அதை வழங்குவதாக உத்தேசம் உண்டா ? அல்லது எவ்வளவு காலத்திற்குள் அதை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த சப்-ஜெயில் மாற்றப்பட வேண்டுமென்ற கொள்கை அனைவராலுமே ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. அதற்கான எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக் கிறது. அது Part II Scheme -இல் சேர்க்கப்பட்டு, நிதிவசதி ஏற்படும்போது, மேற்கொள்ளப்படும்.

*** 445 வினு—திரு. மா. பா. சாரதி** : மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் திறந்த வெளிச் சிறைச்சாலைகள் ஏற் படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) எங்கு, எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) விவரங்கள் இன்னும் முடிவாக்கப்படவில்லை.

திரு. மா பா. சாரதி : தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டத் தில் ஏற்படுத்த உத்தேசம் இருக்கிறது ? அதையாவது இப்போது சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புழல் கிராமத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டு, நிலம் எல்லாம் பெற முயற்சி எடுக்கப் பட்டு வருகிறது. அதற்கு ஆகக்கூடிய செலவுத் தொகை ஒதுக்கப் பட வேண்டும். நிதிவசதி ஏற்படும்போது இது மேற்கொள்ளப் படும்.

THIRU K. VINAYAKAM : In the event of opening of open air prisons, what type of prisoners will be housed there? Will they be criminals involved in murder, arson, looting and similar crimes —they should be prevented from escaping from such prisons—or will they be those sentenced for light offences?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குற்றங்களைப் பொறுத்த வரை யில், கைதிகளை அவரவர்களுடைய பண்புகளுக்கு ஏற்றவாறு சிறைச்சாலைகளில் பிரித்து வைக்கிறார்கள். புதிய சிறைச்சாலை உருவாக்கப்படும்போது எந்தெந்தக் கைதிகள் என்று தீர்மானிக்கப் படும்.

திரு. ந. தருமலிங்கம் : சட்டப் போவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளை வசதி ஆகவும், சொகுசாகவும் ஆக்கிவிட்டால் அதிகம் பேர் குற்றம் செய்துவிட்டு சிறைச்சாலைக்கு வரக்கூடும் என்பதால் சிறைச்சாலைகளில் அதிக வசதிகளை ஏற்படுத்துவதை நிறுத்திவைக்கும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா ?

(விடை இல்லை)